**சுருக்கம்**

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திருச்சிராப்பள்ளி மாவட்டம் - பணியில் இருக்கும் போது காலமான திரு.R.முருகானந்தம், அலுவலக உதவியாளர் என்பவரின் மகன் திரு.மு.மாவடியான், இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை**

**அரசாணை (3ப) எண்.27**

**நாள் 13.05.2022.**
**சுபகிருது, சித்திரை 30,**
**திருவள்ளுவர் ஆண்டு 2053.**
**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்: 23.01.2020.
2. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை எண்.செ.மு.தா4/26/2020, நாள்: 19.12.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண்.36877/2021/டி2, நாள்: 09.08.2021.

*****

**ஆணை:**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி ஊராட்சி ஒன்றியத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து 11.07.2019 அன்று பணியிடைக் காலமான திரு.R.முருகானந்தம் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.மு.மாவடியான் என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், திருச்சிராப்பள்ளி மாவட்ட இயக்க மேலாண்மை அலகில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 22.12.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படியும், மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் நிறைவு செய்யப்பட்ட பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.மு.மாவடியான் கருணை அடிப்படையில் பணி

நியமனம் கோரி 26.09.2019 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 04.06.1999 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 20 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என தெரிவித்து, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரை உரிய அசல் ஆவணங்களுடன் மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்கீழ், இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.மு.மாவடியான் என்பவர் பணிநியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், திருச்சிராப்பள்ளி மாவட்ட இயக்க மேலாண்மை அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 22.12.2020 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத் தொகை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 20.04.2022ஆம் நாளிட்ட அலுவல் சாரா குறிப்பு எண்.7003/ட்டி1/2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா எண்.efile/915/G3/2022, நாள்:30.04.2022 -ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பெ.அமுதா,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
திரு.மு.மாவடியான், இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
(வழி: மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்)
மாநிலக் கணக்காயர், சென்னை -18/35.

கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

**நகல்:**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,
சென்னை-9.
மனித வள மேலாண்மைத் (ஜி.1) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ப.அனந்தசெல்வி
பிரிவுஅலுவலர்.

மே.மு.க.ந4/26/2020-2,
நாள். 15.07.2022.

மாவட்ட ஆட்சியரகம் (வ.பி),
திருச்சிராப்பள்ளி

அரசாணை (நிலை) எண். 27, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை, நாள்: 13.05.2022-இன் நகல் தொடர்புடைய அலுவலருக்கு சார்வு செய்யப்படுகிறது.

(ஒம்)/- ச.பா.கார்த்திகேயன்,
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (வ),
திருச்சிராப்பள்ளி.

// உத்தரவின் படி //

அலுவலக கண்காணிப்பாளர் (வ) (6/7)

15.07.2022

பெறுநர்: திரு. மு. மாவுழயாண்,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,
திருச்சிராப்பள்ளி - உரிய வழியாக.

நகல்: இணை இயக்குநர்/திட்ட இயக்குநர்,
மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,
திருச்சிராப்பள்ளி.

நகல்: ந3 மற்றும் ந8 பிரிவிற்கு.

நகல்: ந4 - இருப்புக் கோப்பிற்கு.